**சுருக்கம்**

விளையாட்டுக்கள் - 2008-2009ம் ஆண்டு முதல் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மாரத்தன் ஓட்டம் நடத்துதல் - மாநில அளவில் நடத்தும் மாரத்தன் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு தமிழக அரசின் சார்பில் பரிசுத் தொகை வழங்குவதற்கு ரூ.6.75 இலட்சம் (தொடர் செலவினம்) - ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

## இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் (எஸ்.2) துறை

**அரசாணை (நிலை) எண். 56**

**நாள்: 24.10.2008**
**ஐப்பசி - 8**
**திருவள்ளுவர் ஆண்டு- 2039**

**படிக்கப்பட்டது:**

மாண்புமிகு அமைச்சர் (சுற்றுச்சூழல்) அவர்களது 2008-2009ம் ஆண்டிற்கான அறிவிப்பு எண்.19.

****

**ஆணை:**

சட்டமன்றப் பேரவையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது, தற்போது மாநில அளவில் சென்னையில் மட்டும் நடத்தப்பட்டு வரும் மாரத்தன் போட்டி தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் (சுற்றுச்சூழல்) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

2. அதன்படி மாவட்டந்தோறும் பின்வருமாறு மாரத்தன் போட்டிகளை மூன்று நிலைகளில் நடத்துவதற்கு அரசு ஆணையிடுகிறது. இதற்காக 30 மாவட்டங்கள் (சென்னை நீங்கலாக) 10 மண்டலங்களாகப் (Zones) பிரிக்கப்படும். ஒரு மண்டலம் மூன்று மாவட்டங்களை உள்ளடக்கியிருக்கும். (இணைப்பு காண்க)

**முதல் நிலை:**

ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட தினத்தில், ஒவ்வொரு மண்டலத்திலும் உள்ள இரண்டு இரண்டு மாவட்டங்கள் அந்தந்த மாவட்டங்களில் மாரத்தன் ஓட்டம் நடத்த வேண்டும் (20 மாவட்டம் x 1 = 20 போட்டிகள்).

**இரண்டாம் நிலை:**

பின்னர் ஒவ்வொரு மண்டலத்திலும் உள்ள விடுபட்ட மூன்றாவது மாவட்டம், அதனுடன் கூடிய மற்ற இரண்டு மாவட்டங்களில் நடத்தப்பட்ட மாரத்தன் ஓட்டப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுடன் சேர்த்து மண்டல மாரத்தன் ஓட்டத்தை நடத்த வேண்டும். ஒவ்வொரு மண்டலத்திலும் உள்ள மூன்று மாவட்டங்களும் ஆண்டுதோறும் சுழற்சி முறையில் இந்த நிலையில் மாரத்தன் ஓட்டத்தை நடத்த வேண்டும் (10 மாவட்டங்கள்x1 = 10 மண்டலப் போட்டிகள்).

…2

<u>எடுத்துக்காட்டு:</u>

திருநெல்வேலி மண்டலம்:

இதில் உள்ளடங்கிய மாவட்டங்கள்:

1. திருநெல்வேலி
2. தூத்துக்குடி
3. நாகர்கோவில்

2008-2009ல்

முதல் நிலை மாவட்டப் போட்டிகள்

1. திருநெல்வேலி
2. நாகர்கோவில்

இரண்டாம் நிலை மண்டலப் போட்டி

1. தூத்துக்குடி

2009-2010ல்

முதல் நிலை மாவட்டப் போட்டிகள்

1. தூத்துக்குடி
2. திருநெல்வேலி

இரண்டாம் நிலை மண்டலப் போட்டி

1. நாகர்கோவில்

2010-2011ல்

முதல் நிலை மாவட்டப் போட்டிகள்

1. நாகர்கோவில்
2. தூத்துக்குடி

இரண்டாம் நிலை மண்டலப் போட்டி

1. திருநெல்வேலி

**<u>மூன்றாம் நிலை:</u>**

அனைத்து மாவட்டங்கள் மற்றும் மண்டலங்கள் நடத்திய மாரத்தன் ஓட்டப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் சென்னையில் நடத்தப்படும் மாரத்தன் ஓட்டத்தில் கலந்து கொள்வார்கள். அனைத்து மாநகராட்சிகளும் சுழற்சி முறையில் மாநில மாரத்தன் ஓட்டத்தை நடத்தலாம் (உதகை, கொடைக்கானல், ஏற்காடு, ஜவ்வாது, ஏலகிரி போன்ற மலைத் தலங்களிலும் மராத்தன் ஓட்டத்தை நடத்தலாம்). பிற மாநில மாரத்தன் ஓட்டத்தில் வெற்றி பெற்றவர்களை இந்த நிலையில் போட்டிக்காக அழைக்கலாம். இது ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தினத்தில் தவறாமல் நடத்தப்பட வேண்டும். ஜனவரி மாதம் தகுந்ததாக இருக்கும் (வெப்பம் குறைவாக இருக்குமென்பதால்). இந்த மாவட்ட மாரத்தன் போட்டிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான மாவட்ட நிர்வாகம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்துடன் இணைந்து நடத்தும்.

….3

3. இந்த மாரத்தன் ஓட்டங்களை நடத்துவதற்கு பின்வருவனவற்றை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் வரையறுக்க வேண்டும்:

- ஓட்டத்திற்கான தூரத்தினை வரையறை செய்ய வேண்டும்
- மாவட்டங்களிலுள்ள வழித்தடங்கள் அறுதியிடப்பட வேண்டும்
  (மாவட்ட தலைமையிடத்தில் அல்லாமல் கிராமப் பகுதிகளை ஒட்டியுள்ள வழித்தடங்கள்)
- மண்டல மராத்தன் ஓட்டத்தை மாவட்ட தலைமையிடத்திலும் நடத்தலாம்
- ஏற்கெனவே சென்னையில் வரையறுக்கப்பட்டுள்ள வழித்தடத்தில் மாற்றம் தேவைமிராது.

4. இந்த மாரத்தன் ஓட்டங்களில் வெற்றி பெறுவோருக்கு பின்வருமாறு பரிசுகள் வழங்குவதற்கு அரசு ஆணையிடுகிறது:

அ) <u>மாவட்டங்கள் நடத்தும் மாரத்தன் போட்டி:</u>

| | | |
|---|---|---|
| முதல் பரிசு | -- | ரூ.1 இலட்சம் |
| இரண்டாம் பரிசு | -- | ரூ.50,000 |
| மூன்றாம் பரிசு | -- | ரூ.25,000 |
| அடுத்து வரக்கூடிய 25 சிறந்த ஓட்டக்காரர்கள் | -- | ரூ.25,000 (ரூ.1000x25) |
| மொத்தம் | -- | ரூ.2 இலட்சம் |

இந்த பரிசுகளுக்கான நிதியை அந்தந்த மாவட்டங்கள் விளையாட்டு ஆதரவாளர்களிடமிருந்தும் புரவலர்களிடமிருந்தும் திரட்ட வேண்டும்.

ஆ) <u>மண்டலங்கள் (Zones) நடத்தும் மாரத்தன் போட்டி:</u>

| | | |
|---|---|---|
| முதல் பரிசு | -- | ரூ.3 இலட்சம் |
| இரண்டாம் பரிசு | -- | ரூ.1 இலட்சம் |
| மூன்றாம் பரிசு | -- | ரூ.50,000 |
| அடுத்து வரக்கூடிய 25 சிறந்த ஓட்டக்காரர்கள் | -- | ரூ.50,000 (ரூ.2000x25) |
| மொத்தம் | -- | ரூ.5 இலட்சம் |

இந்த பரிசுகளுக்கான நிதியை மண்டலப் போட்டி நடத்தும் மாவட்டம் விளையாட்டு ஆதரவாளர்களிடமிருந்தும் புரவலர்களிடமிருந்தும் திரட்ட வேண்டும்.

5. மாநில அளவில் நடத்தப்படும் மாரத்தன் ஓட்டப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு 2008-2009ம் ஆண்டு முதல் பின்வருமாறு பரிசுத் தொகையினை மாநில அரசு வழங்குவதற்கு ஒப்புதலளித்து அரசு ஆணையிடுகிறது:

| | | |
|---|---|---|
| முதல் பரிசு | -- | ரூ.5 இலட்சம் |
| இரண்டாம் பரிசு | -- | ரூ.1 இலட்சம் |
| மூன்றாம் பரிசு | -- | ரூ.50,000/- |
| அடுத்து வரக்கூடிய 25 சிறந்த ஓட்டக்காரர்கள் | -- | ரூ.25,000 (ரூ.1000x25) |
| மொத்தம் | -- | ரூ.6.75 இலட்சம் |

**(ரூபாய் ஆறு இலட்சத்து எழுபத்தையாயிரம் மட்டும்)**

…4

6. மேலும், மாவட்டங்களில் மாரத்தன் போட்டிகள் நடத்தத் திரட்டப்படும் நிதியுடன் (prize money) போட்டிகள் நடத்தும் செலவு மற்றும் பரிசுகளுக்காக அனைத்து மாவட்டங்களுக்கும் தலா ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வீதம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய நிதியிலிருந்து வழங்குவதற்கு அனுமதியளித்தும் அரசு ஆணையிடுகிறது.

7. மாவட்டப் போட்டிகளை நடத்துவதற்கு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான ஒரு குழு அமைக்கப்பட்டு அதன் பொறுப்பில் மாவட்டப் போட்டி நடத்தப்படும். மண்டலப் போட்டிகளை நடத்துவதற்கு மண்டலப் போட்டி நடக்கும் மாவட்டத்தின் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு அதன் பொருப்பில் மண்டலப் போட்டி நடத்தப்படும். இக்குழுவில் பிற இரண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அடங்குவர். மாநிலப் போட்டியை நடத்தும் பொறுப்பு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தை சார்ந்தது.

8. விரிவான வழிகாட்டிகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் செயல் உறுப்பினரால் அனுப்பப்படும்.

9. மேலே பத்தி 5ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:

> "2204 00 விளையாட்டுகளும் இளைஞர் நலப் பணிகளும் - 104 போட்டி விளையாட்டுகளும், விளையாட்டுகளும் - பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் - II மாநிலத் திட்டம் - KB விளையாட்டு நடவடிக்கைகளை மேம்படுத்த தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு மானியங்கள் - 09 உதவித்தொகை - 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை (த.தொ.கு 2204 00 104 KB 0937)".

10. மேலே பத்தி 5ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகைக்கான பட்டியலை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் தயாரித்து அரசு சார்புச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சென்னை-9 வாயிலாக சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை-9க்கு சமர்ப்பிக்குமாறும், அத்தொகையினை ரொக்கமாக வழங்காமல், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், சென்னை தன்வைப்பு நிதிக் கணக்கு எண்.6184513932 என்ற பெயரில் காசோலை வழங்கி இத்தொகையினை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் வரவு வைக்கவும் அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது:

> "K. வைப்புகள் மற்றும் முன்பணங்கள் (B) வட்டியில்லா வைப்புகள் - 8443 00 குடிமுறை வைப்புகள் - 800 ஏனைய வைப்புகள் - CH - தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய வைப்புகள." (த.தொ.கு 8443 00 800 CH 000D)

11. மேலே பத்தி 5ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் "புதுப் பணித் திட்டம்" குறித்த செலவினமாகும். இச்செலவினம், 2008-2009ம் ஆண்டின் துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் உரிய காலத்தில் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்பளிப்பு மூலம் பெற்று தொடக்கத்தில் செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டும். இது தொடர்பான உரிய ஆணைகள் நிதி (வரவு-செலவு-பொது-1)த் துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து தேவையான தொகைக்கு முன்பணம் ஒப்பளிப்பு பெற உரிய செயற்குறிப்பினை வரையறுக்கப்பட்ட படிவத்தில் இந்த ஆணையின் நகலுடன் நிதி (வரவு-செலவு-பொது-1)த் துறைக்கு அனுப்புமாறு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய செயல் உறுப்பினர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். துணை மானியக் கோரிக்கையில் சேர்ப்பதற்கான உரிய முன்மொழிவுகளை நிதித்துறைக்கு உரிய நேரத்தில் தவறாமல் அனுப்பி வைக்குமாறும் செயல் உறுப்பினர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

…5

12. அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டத்தினை செயல்படுத்தியதற்கான அறிக்கை, செலவின அறிக்கை மற்றும் பயன்பாட்டுச் சான்றிதழ் ஆகியவற்றை உரிய காலத்தில் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய செயல் உறுப்பினர் அறிவுறுத்தப்படுகிறார்.

13. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.251/து.செ(இரா.ச)/கல்வி.I/2008 நாள் 23.10.2008-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.1066 (ஆயிரத்து அறுபத்து ஆறு)

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா.கிருத்துதாசு காந்தி
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
செயல் உறுப்பினர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்,
சென்னை-84.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மண்டல முதுநிலை மேலாளர்கள்.
அனைத்து மாவட்ட விளையாட்டு அலுவலர்கள்.(செயல் உறுப்பினர்,
தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலமாக)
மாநில கணக்காயர், சென்னை-9/18.
மாநில கணக்காயர்(தணிக்கை), சென்னை-9/18
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-9.
நகல்:
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
அமைச்சர் (சுற்றுச்சூழல்) அவர்களது சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
நிதித் (கல்வி.1/வ.செ.பொது.1 மற்றும் 2), துறை, சென்னை-9.
செயலரின் தனிச் செயலர்,
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
அரசு சார்புச் செயலாளர்,
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
இ.கோ / உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

அரசு சார்புச் செயலர்.

**அரசாணை (நிலை) எண். 56, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை நாள்: 24.10.2008-ன் இணைப்பு**

| மண்டலம் | மாவட்டங்கள் |
|---|---|
| 1. திருவள்ளூர் | 1. திருவள்ளூர்<br>2. காஞ்சிபுரம்<br>3. வேலூர் |
| 2. தர்மபுரி | 1. கிருஷ்ணகிரி<br>2. தர்மபுரி<br>3. திருவண்ணாமலை |
| 3. விழுப்புரம் | 1. சேலம்<br>2. விழுப்புரம்<br>3. நாமக்கல் |
| 4. கோவை | 1. கோவை<br>2. நீலகிரி<br>3. ஈரோடு |
| 5. பெரம்பலூர் | 1. பெரம்பலூர்<br>2. அரியலூர்<br>3. கடலூர் |
| 6. திருவாரூர் | 1. நாகப்பட்டினம்<br>2. திருவாரூர்<br>3. தஞ்சாவூர் |
| 7. கரூர் | 1. திருச்சிராப்பள்ளி<br>2. கரூர்<br>3. புதுக்கோட்டை |
| 8. தேனி | 1. தேனி<br>2. திண்டுக்கல்<br>3. மதுரை |
| 9. விருதுநகர் | 1. விருதுநகர்<br>2. இராமநாதபுரம்<br>3. சிவகங்கை |
| 10. திருநெல்வேலி | 1. திருநெல்வேலி<br>2. நாகர்கோவில்<br>3. தூத்துக்குடி |

இரா.கிருத்துதாசு காந்தி
அரசு முதன்மைச் செயலாளர்

/உண்மை நகல் /

பிரிவு அலுவலர்